செய்தி வெளியீடு எண்: 330/2018 நாள்: 07.06.2018

**தமிழகத்திலேயே முதன் முறையாக வேலூர் மாவட்ட அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை உதவியோடு 10 வயது சிறுவனுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தில் ரூ.25 இலட்சம் செலவில் இருதய மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது!**

**இருதய அறுவை சிகிச்சை முடிந்து நலமுடன் உள்ள சிறுவனை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் நேரில் அழைத்து நலம் விசாரித்து வாழ்த்து தெரிவித்தார்!!**

வேலூர் மாவட்டம் காட்பாடி லத்தேரி கனகசமுத்திரம் கிராமத்தை சார்ந்த கூலி விவசாயி திரு.பிரகாஷ் தாயார் திருமதி.ரமா ஆகியோரின் இரண்டாவது குழந்தையான 3 ஆம் வகுப்பு படிக்கும் செல்வன்.வேதவிக்னேஷ் அவர்களுக்கு 4 மாதங்களுக்கு முன்னர் உடல் ஆரோக்கியம் குன்றி அவதிபட்டு வந்துள்ளார். இச்சிறுவனின் பெற்றோர் வேலூரில் உள்ள தனியார் மருத்துவமனைகளில் சிறுவனை பரிசோரித்தபோது இருதயத்தில் கோளாறு உள்ளது என்று மருத்துவர்கள் பெற்றோர்களிடம் தெரிவித்து இதற்கு சிகிச்சை அளிக்க இயலாது என்று தெரிவித்துவிட்டனர்.

பின்னர் இவர்கள் வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை குழந்தைகள் நல பிரிவில் அணுகி தன்னுடைய குழந்தையை காப்பாற்றும்படி மருத்துவர்களை அணுகிய போது இச்சிறுவனை மருத்துவர்கள் பரிசோதனைக்கு உட்படுத்தி முழு உடற் பரிசோதனை செய்யப்பட்டது. இந்த பரிசோதனையில் அச்சிறுவனுக்கு ( இருதய தசை தளர்வு - Dilated carido myopathy ) நோய் பிரச்சனை கண்டறிப்பட்டது. இந்த பிரச்சனை என்பது இருதயம் இரத்தத்தை உடலில் உள்ள எல்லா பாகங்களுக்கும் அனுப்பிவைக்கும் பணியினை செய்யும் போது இருதயம் சுருங்கி விரியும். அந்த சுருங்கி விரியும் செயல்பாட்டின் போது பொதுவாக அனைவருக்கும் 75% முதல் 85% வரை இருதயம் சுருங்கி விரியும். ஆனால் இச்சிறுவனக்கு 20% வரை மட்டுமே இருதயம் சுருங்கி விரிவது கண்டறியப்பட்டது. இதற்கு சிகிச்சை ஏதும் கிடையாது இருதயத்தை மாற்றுவது மட்டுமே சிகிச்சையாகும் என்று பெற்றோர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. மேலும் இந்த இருதய மாற்று அறுவை சிகிச்சைக்கு ரூ.25 இலட்சத்திற்கு மேல் செலவாகும் என்றும் தெரிவிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து சிறுவனின் பெற்றோரின் அனுமதியோடு மாற்று இருதயம் பெறுவதற்கு அரசு விதிமுறைகளின் படி சென்னை ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை உதவியுடன் பதிவு செய்யப்பட்டு இதற்கான அனைத்து செலவினைத்தையும் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தில் பயன்படுத்திக்கொள்ள நடவடிக்கைகளையும் மேற்கொள்ளப்பட்டது.

வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை குழந்தைகளுக்கு ஏற்படும் இருதய நோய் தொடர்பான சிகிச்சைகள் அளிக்க சென்னை மலர் போர்டிஸ் மருத்துவமனையுடன் உள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் தமிழகத்தில் உள்ள அரசு மருத்துவகல்லூரி மற்றும் மருத்துவமகைளிலேயே முதன்முறையாக தமிழக முதலமைச்சரின் மருத்துவ காப்பீட்டு திட்டத்தில் ரூ.25 இலட்சம் செலவில் இச்சிறுவனுக்கு இருதய மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டது. இந்நிலையில் சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் மூளைச்சாவு அடைந்த 16 வயது இளைஞரின் இருதயம் அரசு விதிகளின்படி தானமாக பெறப்பட்டு சென்னை மலர் போர்டிஸ் மருத்துவமனையில் இச்சிறுவனுக்கு கடந்த மே மாதம் 1ஆம் தேதி மாற்று இருதய அறுவை சிகிச்சையின் மூலம் வெற்றிகரமாக பொருத்தப்பட்டது. அறுவை சிகிச்சைக்கு பிறகு சிறுவன் முழு உடல் ஆரோக்கியத்துடன் தனது குடும்பத்தாருடன் உள்ளார். மேலும் அடுத்த ஒரு வருட காலத்திற்கு சிறுவனக்கு தேவையான மருத்துவ சிகிச்சைகள் மற்றும் மருந்துகள்

முதலமைச்சரின் மருத்துவ காப்பீட்டு திட்டத்திலேயே பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டு முதல் சென்னை மலர் போர்டிஸ் மருத்துவமனையுடன் ஏற்படுத்தப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வாயிலா இதுநாள்வரை 268 குழந்தைகளுக்கு இருதயம் தொடர்பான அறுவை சிகிச்சைகள் அளிக்கப்பட்டுள்ளது என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இருதய அறுவை சிகிச்சை முடிந்து நலமுடன் உள்ள சிறுவனை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் நேரில் அழைத்து நலம் விசாரித்து வாழ்த்து தெரிவித்து ஆரோக்கியத்துடன் இருந்து நன்றாக கல்வி கற்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த சிகிச்சைகளை மேற்கொண்ட மருத்துவர்களை பாராட்டினார்.

இந்த நிகழ்ச்சியின்போது வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.சாந்திமலர், குழந்தைகள் நல பேராசிரியர் மரு.தேரனிராஜன் மற்றும் சிறுவனின் பெற்றோர் உடனிருந்தனர்.

வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் வேலூர்-9.